**OS.No.246/2019** **P.W.1-பிரமிளா** **02.03.2026**

<u>3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும். வழக்குரையில் என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டதாக கூறும் எல்லா சொத்துக்களையும் சேர்த்துள்ளேனா என்றால் 2 சொத்துக்களை சேர்க்கவில்லை. அவ்வாறு 2 சொத்துக்களை ஏன் சோக்கவில்லை என்பதற்கு காரணம் தெரியுமா என்றால் முதலில் சேர்த்துவிட்டதாக நினைத்தோம். பிற்பாடு தான் சோக்க்வில்லை என்பது தெரியவந்தது. அவ்வாறு எப்பொழுது தெரியவந்தது என்றால் 2022ம் ஆண்டில் தெரியவந்தது. அவ்வாறு தெரியவந்த பிறகு 2 சொத்துக்களை இந்த வழக்கில் சேர்த்தோமா என்றால் அதற்குள் விசாரணை வந்துவிட்டதால் வழக்கறிஞர் சேர்க்க வேண்டாம் என்று கூறிவிட்டார். 2024ம் ஆண்டில் 3ம் பிரதிவாதி விடுபட்ட சொத்துக்களின் விவரம் குறித்து இந்த நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அது பற்றி என் வழக்கறிஞர் என்னிடம் எந்த விவரமும் சொல்லவில்லை. 1வது அயிட்ட சொத்தை பொறுத்து நான் பட்டா மட்டும் தாக்கல் செய்துள்ள நிலையில் அதற்குரிய கிரய பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கிரய பத்திரம் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபோன்ற பத்திரம் என்னிடம் இல்லை. ஏ அட்டவணையில் கண்ட சொத்துக்கள் என் தகப்பனாரின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றும், அதற்குரிய கிரய பத்திரங்களை தாக்கல் செய்தால் அந்த சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் இல்லை என்று தெரிந்து விடும் என்பதால் அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பெரும்பாக்கம் கிராமத்தில் என் தகப்பனாருக்கு பூர்வீக சொத்துக்கள் எவை, எவை என்று தெரியுமா என்று கேட்டால் என் தகப்பனாருக்கு மேற்படி கிராமத்தில் பூர்வீகசொத்துக்கள் இல்லை. என் தாயாருக்கு கொடுத்த சொத்தை வைத்து தான் என் தகப்பனார் கிரயம் பெற்றார். என் தாயாருக்கு பெரும்பாக்கத்தில் உள்ள சொத்தை என் பாட்டி ஆதிலட்சுமி கொடுத்தார். அவ்வாறு எந்த ஆண்டு கொடுத்தார் என்றால் 1976-ல் கொடுத்தார். அதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பட்டா படி என் பாட்டி ஆதிலட்சுமி பெரும்பாக்கத்தில் எந்த சொத்தும் கொடுக்கவில்லை என்றும், 1977ம் ஆண்டு செங்காட்டூர் கிராமத்தில் உள்ள சொத்துக்களை கொடுத்தார் என்றால் செங்காட்டூர்

கிராமத்தில் 1 ஏக்கர் 90 செண்ட் நிலத்தை என் பாட்டி என் தாயாருக்கு கொடுத்தார். அந்த 1 ஏக்கர் 90 செண்ட் நிலத்தை என் தகப்பனார் என் தாயார் பெயரில் கிரயம் வாங்கினார் என்றால் சரியல்ல. அவ்வாறு 1 ஏக்கர் 90 செண்ட் நிலத்தை கிரயம் பெற்றதை காட்டும் கிரய பத்திரம் உள்ளதா என்றால் உள்ளது. அதனை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, என் தகப்பனார் கைவசம் உள்ளது. 1 ஏக்கர் 90 செண்ட் நிலத்தில் 37 செண்ட் நிலத்தை என் தாயார் விற்றுள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது மேற்படி கிரயம் செய்யப்பட்டது. அவ்வாறு புல எண்.15/2ஏ1சி-ல் 37 செண்ட் நிலம் விற்கப்பட்ட விவரத்தை நான் தற்போது தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சென்னை உதவி நீதிமன்றத்தில் நடைபெற்ற அசல் வழக்கு எண்.243/2025-வழக்கில் 1 ஏக்கர் 90 செண்ட் நிலத்தை என் தகப்பனார், என் தாயார் பெயரில் கிரயம் பெற்றார் என்று ஒப்புகிகொண்டுள்ளேன் என்றால் இல்லை. 1977-ல் என் தகப்பனார் கிரயம் பெற்ற கிரய ஆவணம் அவர் வசம் தான் உள்ளது. என் தகப்பனாரிடம் அசல் ஆவணம் உள்ள நிலையில் புல எண்.15/2ஏ2சி-ல் 37 செண்ட் நிலத்தை விற்ற கிரய பத்திரத்தில் அசல் ஆவணம் காணாமல் போய்விட்டதாக பொய்யாக கூறி விற்றுள்ளேன் என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு 2வது திருமணம் பெரியோர்கள் சேர்ந்து நடத்தி வைத்தார்கள் என்றால் 1982-ல் நடந்தது, அந்த விவரம் எங்களுக்கு தெரியாது, 2 நாட்கள் கழித்து தான் தெரியும். எனக்கு திருமணம் ஆகும் வரை நான், என் சித்தி அவரது குழந்தைகள் ஆகியோர் ஒரே வீட்டில் வசித்தோம் என்றால் சரிதான். என் தகப்பனார் 1976ல் வேலையில் சேர்த்தார் என்றால் 1975ல் சேர்ந்தார், என் தாயாரை திருமணம் செய்வதற்கு முன்பே வேலையில் சேர்ந்தார். பூர்வீக சொத்துக்களை விற்று தான் என் தகப்பனார் பெரும்பாக்கத்தில் உள்ள நிலங்களை வாங்கினார் என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் பாட்டி ஆதிலட்சுமி என் தாயாருக்கு 90 செண்ட் நிலம் மட்டுமே 1987-ல் கிரய பத்திரம் மூலம் கொடுத்தார் என்றால் சரிதான். என் தகப்பனார் அம்மனூர், பெரும்பாக்கம் ஆகியஊர்களில் உள்ள சொத்துக்களை 1982லேயே கிரயம் பெற்று விட்டதால் என் தாயாரின் சொத்துக்களை விற்று தான் என் தகப்பனார் சொத்துக்களை வாங்கினார் என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. 1977-ல் கிரயம் பெற்ற சொத்துக்களில் 37 செண்ட் விற்றது போக மீதமுள்ள சொத்துக்களில் வாரிசுகள்

அனைவருக்கும் பாக உரிமை உண்டு என்றால் சரியல்ல. எல்லா சொத்துக்களையும், இந்த வழக்கில் சேர்த்தால் தான் சட்டப்படியான வாரிசுகளுக்கு தரம் பார்த்து பாகம் பிரிக்க முடியும் என்றால் சரிதான். என் தகப்பனார் 3ம் பிரதிவாதி அரிகிருஷ்ணனிடம் எல்லா சொத்து விவரங்களையும் திரட்டி வந்தால் பாகம் பிரிவினை செய்து கொடுப்பதாக கூறினார் என்றால் இல்லை. 4ம் வாதியான என் தம்பி புண்ணியக்கோடி ஏற்கனவே 2013ம் ஆண்டில் ஒரு ஏற்றுமதி கம்பெனி நடத்தி வந்தார் என்றும், அவருக்கு இருந்த குடிப்பழக்கம் காரணமாக மேற்படி நிறுவனம் மூடப்பட்டது என்றால் சரியல்ல. என் தங்கை காதல் திருமணம் செய்து கொண்டதாலும், 4ம் வாதி சரியாக இல்லாததாலும் பாகப்பிரிவினை செய்யாமல் என் தகப்பனார் காலம் கடத்தி வந்தார் என்றால் சரியல்ல. பெரும்பாக்கம் கிராமத்தில் சர்வே எண்.286/4பி 2ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றும், அதில் எனக்கு எந்த பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. சர்வே எண்கள்.289/11, 289/2பி, 284/3இ, 284/3எப் ஆகியவை என் சித்தியான 2ம் பிரதிவாதியின் பெயரில் இருப்பதால் அந்த சொத்துக்களில் எனக்கு எந்தவிதமான பாகமும் இல்லை என்றால் சரியல்ல. பெரும்பாக்கத்தில் உள்ள 289/2ஏ, 289/9பி ஆகிய இரண்டு சர்வே எண்களில் உள்ள சொத்துக்களை 3ம் பிரதிவாதி அரிகிருஷ்ணன் பெயரில் என் தகப்பனார் ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார், அந்த சொத்துக்களில் எனக்கு எந்தவிதமான பாகமும் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் அனைவரும் சொத்துக்களை பிரித்து கொள்ள தயாராக உள்ளோமா என்றால் சமமாக பிரித்து கொள்ள தயாராக உள்ளோம். தனிப்பட்ட பெயர்களில் உள்ள சொத்துக்களை தவிர இதர சொத்துக்களில் எனக்கு பாகம் கொடுப்பதற்கு பிரதிவாதிகள் தயாராக உள்ளார்கள் என்றால் சரியல்ல. எல்லா சர்வே எண்களில் உள்ள சொத்துக்களுக்கான ஆவணங்களை என்னால் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். கிரய ஆவணங்களை தாக்கல் செய்யாமல் இணையவழி பட்டா மூலம் இந்த வழக்கை தாக்கல் செய்ய சட்டப்படி எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. என் தாயாருக்கும், சித்திக்கும் எந்த தனிப்பட்ட வருமானமும் இல்லை என்றும், என் தகப்பனார் தான் அவர்கள் பெயரில் சொத்துக்களை வாங்கினார்கள் என்றும் சொன்னால் என் தாயார் மற்றும் சித்தி மாடு வளர்த்து பால் விற்று வியாபாரம் செய்தார்கள், இட்லி கடை நடத்தினார்கள், வட்டிக்கு விடுவார்கள். என் தாயாருக்கு

75ம் ஆண்டு திருமணம் நடந்த நிலையில் இரண்டே ஆண்டில் அவர்கள் வருமானம் ஈட்டி சொத்துக்களை வாங்கிவிட்டார்களா என்றால் வாங்கிவிட்டார்கள். என் தாயார் 10 பவுன் நகையை அப்பொழுது விற்றார். அதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் எவ்வித ஆவணங்களும் இன்றி வாய்மொழி சாட்சியத்தின் மூலம் பாகப்பிரிவினை கோருவதால் சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் பெரியப்பாவிடம் பூர்வீக சொத்துக்களை பாகம் பிரித்து வாங்கவில்லை.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை